# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# மற்றும்
# இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை-வேலூர் மாவட்டம்

(18.05.2016 முதல் 22.05.2016 வரை)

**கடந்த நான்கு நாட்களில் நிலவிய வானிலை (13.05.2016 முதல் 16.05.2016)**

வேலூர் மாவட்டத்தில் கடந்த நான்கு நாட்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. 1.3 மி.மீ அளவு மழை பெய்தது. அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 38.0-39.0℃ மற்றும் 27.0-28.0℃ என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 34 முதல் 80 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 2-7 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 18.05.2016 | 19.05.2016 | 20.05.2016 | 21.05.2016 | 22.05.2016 |
|---|---|---|---|---|---|
| மேகமூட்டம் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் |
| மழை பொழிவு (மி.மீ) | 100 | 120 | 40 | 30 | 2 |
| காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு | 8 | 8 | 8 | 5 | 5 |
| காற்று வரும் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு |
| வெப்பநிலை°C | | | | | |
| அதிகபட்ச வெப்பநிலை°C | 28 | 28 | 28 | 29 | 30 |
| குறைந்த பட்ச வெப்பநிலை°C | 24 | 24 | 24 | 25 | 26 |
| ஈரப்பதம் | 90-95 | 90-95 | 90-95 | 85-90 | 85-90 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக அடுத்த இரண்டு நாட்களுக்கு மிக அதிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. மேலும், அதற்கு அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.
2. உழவர்கள் தங்களுடைய கால்நடைகள், இளம் கன்று மற்றும் ஆட்டுக்குட்டிகளை மழையில் நனையாமலும் குளிரிலிருந்தும் பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
3. உழவர்கள் தங்களுடைய கால்நடை தீவனப்பொருட்களை மழையில் நனையாமல் பார்த்துக்கொள்வோம்.
4. உழவர்கள் தங்களுடைய கறவை மாடுகளின் மடியை நன்றாக கழுவி மற்றும் உலர்த்தி பால்கறக்கவும் மேலும் பால் கறந்த பின்பு துசி அதிகமுள்ள உலர்தீவனம் அளிப்பதை தவிர்ப்பதன் மூலம் மடிவீக்க நோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள்**

**முக்கிய பயிர்கள்:** நெல், கரும்பு மற்றும் வேர்க்கடலை

1. மிக அதிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதால், உழவர்கள் தங்களுடைய பயிர்களுக்கு உரம் மற்றும் பூச்சிகொல்லி மருந்தினை தெளிப்பதை தள்ளிபோடு மாறு கேட்டுக்கொள்கிறோம்.
2. பயிர்களில் உள்ள அதிக படியான தண்ணிரை வடிய வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.